# News Release

# அனைத்து உள்ளூர் உணவகங்களுக்கும் அழைப்பு

## *இந்தக் குளிர்காலத்தில் வாகனில் நடைபெறும் சுவையான அனுபவத்தில் பங்கேற்க விண்ணப்பியுங்கள்!*

**வாகன், ஒன்ராறியோ (அக். 16, 2025)** – உங்கள் சமையல் திறமையை வெளிப்படுத்தி, விருந்தினர்களை உங்கள் உணவகத்திற்கு வரவேற்க புதிய, சுவாரஸ்யமான வாய்ப்புகளைத் தேடுகிறீர்களா? வாகன் சுவை விழா குளிர்காலப் பதிப்பை தவறவிடாதீர்கள் – இது நமது பிரபலமான உணவு மற்றும் பானக் கண்காட்சி!

முன்பு மிகவும் பிரபலமாக இருந்ததால், வாகன் நகரம் மீண்டும் வாகன் சுவை விழா குளிர்காலப் பதிப்பை ஏற்பாடு செய்கிறது, இதனால் குடியிருப்பாளர்களும் பார்வையாளர்களும் நகரத்தின் மிகவும் பிரபலமான சில உணவகங்களில் சுவையான உணவை அனுபவிக்க முடியும். **இந்தச் சமையல் நிகழ்வை உயிரோட்டமளிக்க உள்ளூர் உணவகங்களை அன்புடன் அழைக்கிறோம்!**

உள்ளூர் உணவக பொருளாதாரத்தை ஆதரிக்கவும், நகரத்தின் பல்வகைச் சமையல் கலாச்சாரத்தை வெளிப்படுத்தவும் வடிவமைக்கப்பட்ட வாகன் சுவை விழா குளிர்காலப் பதிப்பு ஒரு இரண்டு வார உணவு விழாவாகும். இது ஜனவரி 23 வெள்ளி முதல் பிப்ரவரி 6 வெள்ளி வரை, வாகனில் பங்கேற்கும் உணவகங்களில் நடைபெறும். அங்கு விருந்தினர்கள் பல விலை வகைகளில் வழங்கப்படும் மூன்று-கோர்ஸ் ப்ரீக்ஸ் ஃபிக்ஸ் மெனுக்களை அனுபவிக்கலாம் (இதன் பொருள் – பல கோர்ஸ் கொண்ட உணவுகள் ஒரே, நிர்ணயிக்கப்பட்ட விலையில் வழங்கப்படுகின்றன)

குடும்ப-நட்பு உணவகங்களிலிருந்து உயர்தர உணவக அனுபவங்கள் வரை, மற்றும் அதற்கிடையேயும் – ஒவ்வொருவருக்கும் ருசிகரமானது ஒன்றாவது இருக்கும்.

வாகனில் உட்கார்ந்து உணவருந்தும் வாய்ப்புகள் கொண்ட உணவகத்தை நீங்கள் வைத்திருந்தால் அல்லது இயக்கினால், மேலும் தகவல்களுக்கு அணுகி,

விதிமுறைகளைப் பரிசீலித்து, **வாகன் சுவை விழா குளிர்காலப் பதிப்பில் பங்கேற்க அக்டோபர் 31 வெள்ளிக்கிழமைக்குள்** visitvaughan.ca/**VaughanFlavours** இல் விண்ணப்பிக்க உங்களை நாங்கள் அழைக்கிறோம். வாகன் சுவை விழாவில் பங்கேற்பது இலவசம்; பங்கேற்கும் உணவகங்கள் $500 முழுமையாகத் திருப்பி வழங்கக்கூடிய வைப்புப் பணத்தை வழங்க வேண்டும். நிகழ்ச்சி வெற்றிகரமாக முடிந்தவுடன், இந்த வைப்புப் பணம் திருப்பி வழங்கப்படும்.

நிகழ்ச்சியைத் தங்கள் குளிர்காலப் பயணத் திட்டங்களில் சேர்ப்பதில் ஆர்வமாக உள்ள அனைத்து உணவுப் பிரியர்களுக்கும், பங்கேற்கும் உணவகங்களின் பட்டியல் இந்த இலையுதிர்காலத்திற்குப் பின்னர் அறிவிக்கப்படும். காத்திருக்கவும்!

வாகன் சுவை விழா என்பது, அமெரிக்காவில் விதிக்கப்பட்ட பரந்த அளவிலான வரிகளை எதிர்கொள்வதற்கான நடவடிக்கையாக, உள்ளூர் வணிகங்களை ஆதரிக்க உருவாக்கப்பட்ட நகரத்தின் முன்முயற்சி ஆகும். இது மேயர் ஸ்டீவன் டெல் டுகாவும், வார்டு 2 கவுன்சிலர் அட்ரியானோ வோல்பெண்டெஸ்டாவும் முன்வைத்த உறுப்பினர் தீர்மானத்தின் அடிப்படையில் உருவானது. அந்தத் தீர்மானம், வாகனில் வசிப்பவர்களும் பார்வையாளர்களும் உள்ளூர் உணவகங்களில் உணவருந்த ஊக்குவிக்கும் ஒரு முயற்சி திட்டத்தை உருவாக்க நகர ஊழியர்களை வழிநடத்துகிறது. ஏப்ரலில், வாகன் கவுன்சில், வாகன் சுவை விழாவுக்கான முயற்சி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஊழியர் அறிக்கையை அங்கீகரித்தது.

மார்ச் மாத தொடக்கத்தில், அமெரிக்கச் சப்ளையர்களைத் தடை செய்யும் கொள்கையை அங்கீகரித்த ஒன்ராறியோ மாகாணத்தின் முதல் நகராட்சியாக வாகன் திகழ்ந்தது. ஏப்ரல் மாதத்தில், வாகன் நகரம், வணிகங்களுக்கு ‘வாகன் உறுதியானது – கனடியர்களை ஆதரிக்கவும்’ எனும் இலவச வரவேற்புத் தொகுப்புகளை வழங்கத் தொடங்கியது. இவை, கடைகளில் உள்ள உள்ளூர் மற்றும் கனடாவில் தயாரிக்கப்பட்ட பொருட்களை அடையாளம் காண உதவும் பொருட்களைக் கொண்டுள்ளன. இது கட்டணம் செலுத்தும் கவுண்டரில் வாடிக்கையாளர்கள் சந்திக்கும் குழப்பத்தை நீக்குகிறது. உங்கள் வணிகத்திற்கான வரவேற்புத் தொகுப்பைக் கோர, ed@vaughan.ca என்ற முகவரியில் பொருளாதார மேம்பாட்டுக் குழுவைத் தொடர்பு கொள்ளவும்.

**மேற்கோள்கள்**

“இந்தக் கோடையில் வாகன் சுவை விழாவை வெற்றிகரமாக அறிமுகப்படுத்திய பிறகு, 2026 ஆம் ஆண்டில் மீண்டும் நடத்தவுள்ளதாக அறிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். வாகனில் பல்வேறு சுவையான கலாச்சார உணவுகளை வழங்கும் பல அருமையான உணவகங்கள் உள்ளன. வாகன் சுவை விழா குளிர்காலப் பதிப்பு மூலம், குடியிருப்பாளர்கள் பங்கேற்கும் உள்ளூர் உணவகங்களில் மூன்று-கோர்ஸ் ப்ரீக்ஸ் ஃபிக்ஸ் மெனுக்களை அனுபவிக்க முடியும். நீங்கள் ஒரு உள்ளூர் உணவக உரிமையாளர் என்றால், இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க விண்ணப்பிக்க உங்களை ஊக்குவிக்கிறேன். இது புதிய விருந்தினர்களையும், பழைய விருந்தினர்களையும் வரவேற்று, சிறப்பு மெனுவை வெளிப்படுத்துவதற்கான ஒரு நல்ல வாய்ப்பு. இந்த நிகழ்ச்சிக்கு தொடர்ந்த ஆதரவு வழங்கிய வார்டு 2 கவுன்சிலர் அட்ரியானோ வோல்பெண்டெஸ்டா அவர்களுக்கு மீண்டும் என் நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். நாம் “வாகன் உறுதியானது”, அமெரிக்காவின் வரிகளுக்கு எதிராக உள்ளூர் வணிகங்களை ஆதரிக்கத் தொடர்ந்து செயல்படுவோம். இந்தக் குளிர்காலத்தில் அனைவரும் மற்றொரு அற்புதமான உணவு அனுபவங்களுக்குத் தயாராக இருப்பார்கள் என்று நம்புகிறேன்!”

- மேயர் ஸ்டீவன் டெல் டுகா

இந்தக் குளிர்காலத்தில் வாகன் சுவை விழாவை மீண்டும் நடத்துவதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்! உள்ளூர் வணிகங்கள் நமது பொருளாதாரத்திற்கு அவசியமானவை, எனவே வாகன் நகரமாகவும், வாகன் குடிமக்களாகவும் அவற்றை ஆதரிப்பது நமது கடமை. வாகன் சுவை விழா நிகழ்ச்சி, வாகனில் உள்ள சில அற்புதமான உணவகங்களை வெளிப்படுத்துகிறது, வருடம் முழுவதும் கிடைக்காத சிறப்பு மெனுக்களை வழங்குகிறது. இந்த வாகன் சுவை விழா நிகழ்ச்சிக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கிய மேயர் ஸ்டீவன் டெல் டுகா அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி!

- கவுன்சிலர் அட்ரியானோ வோல்பெண்டெஸ்டா, வார்டு 2

**முக்கியத் தகவல்கள்**

- வாகன் நகரம் வாகன் சுவை விழா குளிர்காலப் பதிப்பை நடத்தவுள்ளது. இது ஜனவரி 23, வெள்ளி முதல் பிப்ரவரி 6, 2026 வெள்ளி வரை இரண்டு வாரங்கள் நடைபெறும்.
- இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கும் உணவகங்கள், மூன்று-கோர்ஸ் ப்ரீக்ஸ் ஃபிக்ஸ் மெனுவுடன் உட்கார்ந்து உணவருந்தும் அனுபவத்தை வழங்குகின்றன.

- ஆர்வமுள்ள உணவகங்கள் மேலும் தகவல் அறிந்து பங்கேற்க அக்டோபர் 31, வெள்ளிக் கிழமைக்குள் visitvaughan.ca/**VaughanFlavours** மூலம் விண்ணப்பிக்கலாம்.
- வாகன் நகரத்தின் முதல் வாகன் சுவை விழா நிகழ்ச்சி இந்தக் கோடையில் நடத்தப்பட்டது.

**மேலும் அறிய**

- ஏப்ரல் 8 ஊழியர் அறிக்கை: வாகன் உணவகத் திருவிழா – கோடை 2025 | குளிர்காலம் 2026
- பொருளாதார மேம்பாட்டுத் துறை மின்-செய்திமடல்
- பொருளாதார மேம்பாடு LinkedIn
- மேயர் ஸ்டீவன் டெல் டுகா மற்றும் வார்டு 2 கவுன்சிலர் அட்ரியானோ வோல்பெண்டெஸ்டா ஆகியோரின் மார்ச் 18 தேதியிட்ட உறுப்பினர் தீர்மானம்: வாகன் உணவகத் திருவிழா
- வாகன் சுற்றுலா வலைத்தளம்
- vaughanbusiness.ca/**VaughanStrong**
- visitvaughan.ca/**VaughanFlavours**

**இந்தச் செய்தி வெளியீட்டை கீழ்க்காணும் மொழிகளில் வாசிக்கவும்:**
[13 மொழிகள்]

-30-

**வாகனைப் பற்றி:** வாகன் நகரம் கனடாவின் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும், இதன் மக்கள் தொகை 344,412 ஆக உள்ளது. 1991-இல் இணைக்கப்பட்ட வாகன், கான்கார்ட், க்ளீன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில் மற்றும் வுட்பிரிட்ஜ் சமூகங்களை உள்ளடக்கியது. இந்தக் கலாச்சார ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்ட நகராட்சி, யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொராண்டோ பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.


**ஊடக தொடர்புக்கு:** வாகன் நகரம்
தொடர்புகள், சந்தைப்படுத்தல் மற்றும் ஈடுபாட்டுத் துறை
905-832-2281 | corpcomm@vaughan.ca